**செய்தி வெளியீடு எண்:597** **நாள்: 10.09.2017**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 10.9.2017 அன்று 'நதிகளை மீட்போம் – பாரதம் காப்போம்' விழிப்புணர்வு நிகழ்ச்சியில் ஆற்றிய உரை**

**நதிகளை மீட்போம்** என்ற தேசிய விழிப்புணர்வு இயக்கத்தினை
உருவாக்கி, 16 மாநிலங்களில்
7000 கிலோமீட்டர் பயணம் செய்து
நதிகளைப் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தும்
பயணத்தின் ஒரு கட்டமாக
சென்னைக்கு வருகை தந்துள்ள
ஈஷா யோகா நிறுவனர் மரியாதைக்குரிய
சத்குரு அவர்களே !

இந்த விழிப்புணர்வு விழாவில் கலந்துகொண்டு சிறப்பிக்கும்
மாண்புமிகு துணை முதலமைச்சர்
திரு O. பன்னீர்செல்வம் அவர்களே !

இந்த இனிய விழாவில் கலந்து கொண்டு
சிறப்பு சேர்க்கும்
மத்திய நிதி மற்றும் கப்பல் போக்குவரத்துத்துறை
இணை அமைச்சர்
திரு பொன் இராதாகிருஷ்ணன் அவர்களே !
இந்த சீர்மிகு விழாவில் கலந்துகொண்டு சிறப்பிக்கும்
மாண்புமிகு அமைச்சர்

திரு திண்டுக்கல் C. சீனிவாசன் அவர்களே !

திரு K.A. செங்கோட்டையன் அவர்களே !

திரு. S.P. வேலுமணி அவர்களே !

திரு D. ஜெயகுமார் அவர்களே!

விழாவில் பங்கேற்று சிறப்பிக்கும்

அப்பல்லோ மருத்துவமனை குழுமத் தலைவர்

டாக்டர் பிரதாப் ரெட்டி அவர்களே !

இந்திய தொழில்நிறுவனங்களின் கூட்டமைப்பு

தமிழ்நாடு பிரிவின் தலைவர்

திரு P. ரவிச்சந்திரன் அவர்களே !

திரு. ராஜீவ் மிட்டல் அவர்களே !

கலை உலகிலிருந்து இந்த நிகழ்ச்சியை

சிறப்பிக்க வந்துள்ள

திருமதி சுகாசினி மணிரத்னம் அவர்களே !

திருமதி சுதா ரகுநாதன் அவர்களே !

திரு விவேக் அவர்களே !

திருமதி உஷா உதுப் அவர்களே !

திரு கார்த்திக் அவர்களே !

இந்த இனிய விழாவில் பங்கேற்க வந்துள்ள பொதுமக்களே !

வணக்கத்திற்குரிய பெரியோர்களே ! தாய்மார்களே !

இளைஞர்களே ! மாணவ – மாணவிகளே !

ஈஷா இயக்கத் தொண்டர்களே !

தன்னார்வலர்களே ! அரசு அலுவலர்களே !

பத்திரிக்கை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே !

உங்கள் அனைவருக்கும் முதற்கண்

எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம் நாட்டின் நதிகள் மீட்பு குறித்து மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் '**நதிகளை மீட்போம் – பாரதம் காப்போம்**' என்ற இயக்கம் தேசிய இயக்கமாக சத்குரு அவர்கள் தலைமையில் கோயம்புத்தூர் முதல் புது தில்லி வரையில் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது. இவ்வியக்கத்தின் ஒரு பகுதியாக சென்னையில் நடைபெறும் இச்சீர்மிகு விழாவில் உங்களுடன் பங்கேற்பது எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது. இந்த இயக்கத்தின் முக்கிய நோக்கமான மரங்களை நடுவதன் மூலம் நதிகளைப் பாதுகாப்பது, போன்ற பல்வேறு இயற்கையைப் பேணிக் காக்கும் நிகழ்வுகள் மீது மறைந்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மிகுந்த நாட்டம் கொண்டிருந்தார்கள். இதனால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நதிகளை இணைப்பதற்கு பல்வேறு வகையில் முயற்சிகளை எடுத்து வந்தார்கள். அதேபோன்று, பன்மாநில நதிகளை தேசியமயமாக்கி, நதிகளின் நீர் ஆதாரத்தை உகந்த வகையில் உபயோகப்படுத்தப்பட வேண்டும் என்றும் மத்திய அரசைக் கோரி வந்தார்கள். நதிகள் இணைப்பிற்காக நடைபெற்ற பல்வேறு

கூட்டங்களில், உச்ச நீதிமன்ற ஆணையின்படி நதிகள் இணைப்பு திட்டம் உடனடியாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என தமிழ்நாடு அரசு மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

தமிழ்நாட்டில் 34 ஆறுகள், 89 அணைகள் மற்றும் 14,098 பெரிய ஏரிகள் பொதுப்பணித் துறையினால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் நிலத்தடி மற்றும் மேற்பரப்பு நீர்வளத்தினை பாதுகாக்கும் அனைத்து நடவடிக்கைகளையும் அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

‘ நீரின்றி அமையாது உலகு’ என்றார் வள்ளுவர். நீர்வள ஆதாரங்களை சீரிய முறையில் மேம்படுத்துவதற்கான முக்கிய முயற்சியாக ‘குடிமராமத்து’ முறைக்குப் புத்துயிரூட்டி பங்கேற்பு அணுகுமுறையுடன் நீர்நிலைகளை மீட்டெடுக்கும் பணிகள் தமிழ்நாட்டில் நடைபெற்று வருகின்றன. 2016-2017 ஆம் ஆண்டில் 1,519 பணிகள் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயலாக்கப்பட்டுள்ளன. 2017–2018 ஆம் ஆண்டு 300 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் 2,065 பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

மேலும், ஒரு சிறப்பு முயற்சியாக ஏரிகள், நீர்த்தேக்கங்கள் மற்றும் பிற நீர்நிலைகளிலிருந்து களிமண், வண்டல் மண், சவுடு மற்றும் சரளை மண்ணை பொதுமக்கள், விவசாயிகள் மற்றும் மண்பாண்டம் செய்பவர்களுக்கு இலவசமாக வழங்கும் பணிகள் தற்பொழுது செயலாக்கத்தில் உள்ளன.

மேலும் மாநிலத்திலுள்ள அணைகள் மற்றும் நீர்த்தேக்கங்களில் படிந்துள்ள வண்டல் படிவுகளை அகற்றி, அணைகளின் திட்டமிடப்பட்ட

கொள்ளளவினை மீட்டெடுக்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நிலத்தடி நீரை செறிவூட்டவும் ஆறுகளிலிருந்து ஏரிகளுக்குத் தண்ணீரை கொண்டு செல்லவும் புதிய தடுப்பணைகள் மற்றும் அணைக்கட்டுக்கள் கட்டவும் ரூபாய் 1000 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டங்கள் 3 ஆண்டுகளில் செயல்படுத்தப்படவுள்ளன.

காவேரி ஆற்றின் கழிமுகப் பகுதிகளில் பருவ மழைக் காலங்களில் ஏற்படும் வெள்ள அபாயத்தினை தணிப்பதற்கும், அப்பகுதிகளில் உள்ள வடிகால்களை மேம்படுத்துவதற்கும், 1,560 கோடி ரூபாய் மதிப்பீட்டில், திட்டம் தற்பொழுது செயலாக்கத்தில் உள்ளது.

மேலும், காவேரி வடிநிலத்தில் பாசன அமைப்புகளை 14,500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தி, புனரமைக்கும் திட்டத்தின் கீழ், கல்லணைக் கால்வாய் நீட்டித்தல், புனரமைத்தல் மற்றும் நவீனப்படுத்துதல் திட்டத்திற்கு 2,298 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான விரிவான திட்ட அறிக்கைக்கு மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

நதிகள் இணைப்பிற்காக இதுவரை நடைபெற்ற 12 கூட்டங்களில், உச்ச நீதிமன்ற ஆணையின்படி நதிகள் இணைப்பு திட்டம் உடனடியாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என மத்திய அரசை தமிழ்நாடு அரசு வலியுறுத்தி வருகிறது. மேலும், இதனைப் பூர்த்தி செய்யும் வகையில்,

(i) கங்கை சீரமைப்பு பணியினை மேற்கொள்வதை போன்று தேசிய தொலைநோக்கு திட்டத்தின்கீழ் நதிகள் இணைப்பு திட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டும் என்றும்,

(ii) மகாநதி – கோதாவரி – கிருஷ்ணா – பெண்ணாறு – பாலாறு – காவேரி – வைகை – குண்டாறு இணைப்பிற்கான விரிவான திட்ட அறிக்கை மேலும் காலதாமதமின்றி தயாரிக்கப்பட வேண்டும் என்றும்,

(iii) நதிகள் இணைப்புத் திட்டத்தினை செயல்படுத்துவதற்காக மத்திய அரசு நாடாளுமன்றத்தில் தனக்குள்ள அதிகாரத்தின் மூலம் ஒரு சட்டத்தை கொண்டு வர வேண்டும் என்றும்,

(iv) தேசிய அதிமுக்கியத்துவம் வாய்ந்த இந்த திட்டத்திற்கு துரிதமாக செயல்திட்டத்தை வகுக்க வேண்டும் எனவும் தொடர்ந்து மத்திய அரசை வலியுறுத்தி வருகிறது.

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை **27.02.2017** அன்று நான் சந்தித்து பன்மாநில நதிகள் தேசிய மயமாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை மீண்டும் வலியுறுத்தியுள்ளேன்.

மேலும், **24.05.2017** அன்று நான் எழுதியுள்ள கடிதத்தில் பம்பா – அச்சன்கோவில் – வைப்பாறு இணைப்பு திட்டத்திற்கான இசைவினை வழங்க கேரள அரசுக்கு உரிய அறிவுரை வழங்கும்படி மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை கேட்டுக் கொண்டுள்ளேன்.

தமிழ்நாட்டில் காவேரி ஆற்றிலிருந்து தண்ணீரை வைகை மற்றும் குண்டாற்றிற்கு கொண்டு செல்ல உரிய நதிகள் இணைப்பை ஏற்படுத்தும்பொருட்டு காவேரி ஆற்றின் குறுக்கே கரூர் மாவட்டம் மாயனூர் என்ற இடத்தில் புதிய கதவணை **254** கோடியே **45** இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு அரசால் மாநில அரசின் நிதி ஆதாரங்களைக் கொண்டு கட்டப்பட்டுள்ளது. இரண்டாவது கட்டமாக இக்கதவணையின் மேற்பகுதியிலிருந்து புதிய கால்வாய் அமைத்து

காவேரி ஆற்றின் வெள்ள நீரை அக்னியாறு, தெற்கு வெள்ளாறு, மணிமுத்தாறு, வைகை மற்றும் குண்டாறு ஆகிய ஆறுகளுக்கு திருப்ப உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பவானி ஆற்றின் மிகை நீரை காளிங்கராயன் அணைக்கட்டிலிருந்து நீரேற்று முறையில் கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்களில் உள்ள ஏரிகள், குளம் குட்டைகளை நிரப்பும் திட்டமாக அத்திகடவு – அவிநாசி திட்டம் செயல்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ளது. இதன் மூலம் ஈரோடு, திருப்பூர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் உள்ள 30 பொதுப்பணித்துறை ஏரிகள், 41 ஒன்றிய ஏரிகள் மற்றும் 630 குளம் குட்டைகள் பயன்பெறும் .

நீர்வளங்களுக்கு ஆதாரமாக உள்ள காடுகளையும், மரங்களையும் பேணிப் பாதுகாப்பதில் அரசு தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறது.

தமிழ்நாடு வனத்துறையின் மூலம் பசுமைப் போர்வையினை மேம்படுத்தவும், மரங்களின் பயன்பாட்டினை நீட்டிக்கவும் வனங்களுக்கு உள்ளேயும், வெளியேயும், 7.55 கோடி மரக்கன்றுகள் நடப்பட்டு வன வளங்கள் பாதுகாக்கப்பட்டு, பருவ நிலை மாற்றங்களை எதிர்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பிறந்தநாளை ஒட்டி 2012–13 முதல் ஒவ்வொரு ஆண்டும் மாபெரும் மரம் நடவுத் திட்டத்தின் கீழ் இதுவரை 3.99 கோடி மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டு மரங்களின் அடர்த்தியை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் **69** வது பிறந்த நாளான பிப்ரவரி மாதம் **24–**ஆம் தேதியன்று தமிழ்நாடு அரசு பல்நோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை வளாகத்தில் மரக்கன்று ஒன்றினை நட்டு **69** இலட்சம் மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சியினை துவக்கி வைத்ததை மகிழ்ச்சியுடன் இங்கு நினைவு கூர விரும்புகிறேன்.

மேலும், காப்பு வனப்பகுதிகளுக்கு வெளியே மரங்களடர்ந்த பரப்பினை அதிகரித்தல் மற்றும் ஆற்றுப்படுகைகளில் மண் அரிப்பை தடுத்தல் ஆகியவற்றினை நோக்கங்களாகக் கொண்டு ஆற்றுப் படுகைகளில் **14,335** எக்டேர் பரப்பளவில் தேக்குமரத் தோட்டங்கள் எழுப்பும் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அறிவிப்பின்படி தமிழ்நாட்டில் இயற்கையாக சந்தன மரங்கள் வளரும் மாவட்டங்களான வேலூர், சேலம், ஈரோடு, தர்மபுரி மற்றும் திருச்சி மாவட்டங்களில் சந்தனமரங்களை மறுஉற்பத்தி செய்யும் திட்டம் ரூ.**100.00** கோடி செலவில், **2016–17–**ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

**12.12.2016** அன்று வார்தா புயல் காரணமாக சென்னை மாநகரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் ஒரு இலட்சத்திற்கும் மேலான மரங்கள் வேரோடு சாய்ந்தன. இழந்த பசுமைப் போர்வையினை மீட்டெடுக்கும்பொருட்டு சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் மரக்கன்றுகள் நடுவதற்காக ரூ. **13.42** கோடி செலவில் மரக்கன்றுகள் நடப்பட்டு வருகின்றது.

வனப்பகுதிகளில் உயிர்ப்பன்மையினை அதிகரிக்கவும், வைகை மற்றும் நொய்யல் நீர்வடிப்பகுதிகளில் தொடர் நீர் வரத்தினை அதிகரிக்கவும் ரூ.24.58 கோடி மதிப்பீட்டில் வைகை மற்றும் நொய்யல் ஆறுகளுக்கு புத்துயிர் ஊட்டுதல் எனும் புதிய திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

எனவே, இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியின் நோக்கம் தமிழக அரசின் சீரிய கவனத்தில் உள்ளது என்பதைத் தெரிவித்து மேலும், மரியாதைக்குரிய ஈஷா யோகா மையத்தை சார்ந்த திரு.சத்குரு அவர்கள் நதிகளை மீட்போம் என்ற இயக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது மிகவும் பாராட்டுக்குரியதாகும். நீர் மிக மிக இன்றியமையாதது. மனிதர்கள், விலங்குகள், தாவரங்கள் ஆகிய அனைத்திற்கும் நீரின் தேவை மிக முக்கியமானதாகும். அரசு புறம்போக்கு நிலங்களில் எங்கெங்கெங்கே இந்த ஈஷா யோகா மையத்தை சார்ந்தவர்கள் மரக்கன்றுகள் நட முன்வந்தால், அதற்கான அனைத்து உதவிகளையும் இந்த அரசு செய்யும். திரு.சத்குரு அவர்கள் எந்த நோக்கத்திற்காக இந்த இயக்கத்தை தொடங்கினாரோ, அந்த இயக்கம் வெற்றி பெற நாம் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். இந்த இனிய விழாவிற்கு ஏற்பாடு செய்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும், ஈஷா யோக அமைப்பினருக்கும் எனது உளமார்ந்த வாழ்த்துக்களையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி !

வணக்கம்.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**